(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 17.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 மார்ச் 22 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** போக்குவரத்து அமைச்சர்

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** வர்த்தக அமைச்சர்

**கௌரவ எஸ்.எம். சந்திரசேன,** காணி அமைச்சர்

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்,** அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார,** நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்ட அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து,** நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சீ.பீ. ரத்நாயக்க,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர்

**கௌரவ சமல் ராஜபக்ஷ,** நீர்ப்பாசன அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நாமல் ராஜபக்ஷ,** இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ,** நிதி அமைச்சர்

**கௌரவ காமினி லொக்குகே,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,** மின்சக்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி,** நீதி அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா,** நகர அபிவிருத்தி, கழிவுப்பொருட்களை அகற்றுதல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன,** ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேக்கர,** பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விமலவீர திசாநாயக்க,** அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஷெஹான் சேமசிங்க,** சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்**

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ அமரகீர்த்தி அதுகோரள**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ நஸீர் அஹமட்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ வருண லியனகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

திருமதி குஷானி ரோஹனதீர, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'மிகைக்கட்டண வரி' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கௌரவ சபாநாயகருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

சட்டமூலத்தின் ஏற்பாடுகளை முற்றுமுழுதாகப் பரிசீலனை செய்யுமிடத்து, சட்டமூலமோ அல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரை அல்லது 13ஆம் உறுப்புரைகளுக்கு ஒவ்வாதனவாகவிராது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் 'மிகைக்கட்டண வரி' எனும் இச்சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றலாம் என உயர் நீதிமன்றம் மேலும் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2022 மார்ச் 16 ஆம் திகதி 'புலமைச் சொத்து (திருத்தம்)' எனும் சட்டமூலத்திலும், 2022 மார்ச் 19 ஆம் திகதி 'தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு', 'வேலையாட்கள் நட்டஈடு (திருத்தம்)' மற்றும் 'காணி அபிவிருத்தி (திருத்தம்)' ஆகிய சட்டமூலங்களிலும் கௌரவ சபாநாயகரால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**III**

" 'சிசிர ஜயகொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு பின்வரும் உறுப்பினர்கள் கௌரவ சபாநாயகரால் மேலதிக உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்:-

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ வருண லியனகே

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பீ.வை.ஜி. ரத்னசேக்கர

கௌரவ லலித் வர்ண குமார"

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2019 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XXII பகுதியையும்; மற்றும்

(ii) 2020 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XVI மற்றும் XVII ஆம் பகுதிகளையும், ஐந்தாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் மற்றும் ஆறாவது தொகுதியின் I மற்றும் II ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் எட்டாவது தொகுதியின் அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள் தொடர்பான செயலாற்றுகை அறிக்கையின் - V ஆம் பகுதியை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2017 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் XIV பகுதியையும்;

(ii) 2018 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் XV பகுதியையும்;

(iii) 2019 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXIII மற்றும் XXXIV ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XIV ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXVI ஆம் பகுதியையும்; மற்றும்

(iv) 2020 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXIV, XXV மற்றும் XXVI ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் XIV ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XI, XII, XIII மற்றும் XIV ஆம் பகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(4) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பத்தாவது தொகுதியின் மத்திய கலாச்சார நிதியத்தின் தொழிற்பாடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையின் - I ஆம் பகுதியை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(5) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் எட்டாவது தொகுதியின் உள்ளூர் சந்தையில் தரமான உற்பத்திப் பொருட்களின் விற்பனை தொடர்பாக இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் வகிபங்கு தொடர்பான செயலாற்றுகை கணக்காய்வு அறிக்கையின் - IV ஆம் பகுதியை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(6) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) கல்வி அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(8) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை மின்சக்தி அலுவல்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான முதியோர்களுக்கான தேசிய சபையின் ஆண்டறிக்கைகள்; மற்றும்

(ii) 2020 ஆம் ஆண்டுக்கான ஆயுர்வேத வைத்திய சபையின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான ஆயுர்வேத திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(11) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை நிதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) நெடுஞ்சாலைகள் அமைச்சர், (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 122, 122அ மற்றும் VIIஅ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2251/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிகள் போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. **குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ எஸ்.எம். சந்திரசேன அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

4. **பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) கடுவெல்லகம, தொடில்லகஹவத்த, இல. 244/ஏ/01 இல் வதியும் திரு. ஆர்.பி. திலகரத்னவினது 2022.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இந்திக அநுருத்த ஹேரத் சமர்ப்பித்தார்.

(2) பிலியந்தல, மகுலுதூவ, பிரிய மாவத்தை, இல. 53/10 இல் வதியும் திரு. டப்ளியூ.டப்ளியூ.எஸ்.எஸ்.என். பெரேரா மற்றும் ஏனைய ஏழு பேரினது 2021.12.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இரான் விக்கிரமரத்ன சமர்ப்பித்தார்.

(3) தம்பலகாமம், வர்ணமெடு எனும் முகவரியில் வதியும் திரு. ரீ. சண்முகத்தினது 2021.12.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கோவிந்தன் கருணாகரம் சமர்ப்பித்தார்.

(4) ரக்வான, மெதகங்கொட எனும் முகவரியில் வதியும் திரு. எம்.ஜி. ரோசன் இந்திக கமகேயினது 2022.02.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) முதிதா பிரிசாந்தி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2022 சனவரி 21 ஆம் திகதி பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல் 2022 மார்ச் 16 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு "வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு" என மீளப் பெயரிடப்படுதல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இலங்கையில் பாலின அடிப்படையிலான பாகுபாடுகள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் பற்றி ஆராய்ந்து அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழுவினால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 2021 மார்ச் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதால் விசேட குழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2023 ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுச் சட்டமூலம் சபையின் அனுமதியுடன் மீளப் பெறப்பட்டது.

**8. பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம்**: இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

"கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்குவாராக" என வலுசக்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.30 மணிக்கு கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்கினார்.)

“கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்குவாராக” என நீதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.03 மணிக்கு கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் தலைமை தாங்கினார்.)

“கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக” என தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.27 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.58 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு பாராளுமன்றம் பின்வருமாறு சார்பாக 86: எதிராக 35 பேரும் வாக்களித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி நூற்றிப் பதினாறு (116) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:—

| | |
|---|---|
| G 003. Nimal Siripala De Silva | Yes |
| G 004. Chamal Rajapaksa | Yes |
| G 005. Johnston Fernando | Yes |
| G 006. Dinesh Gunawardena | Yes |
| G 009. Basil Rohana Rajapaksa | Yes |
| G 010. G.L. Peiris | Yes |
| G 011. Pavithradevi Wanniarachchi | Yes |
| G 013. Gamini Lokuge | Yes |
| G 016. C. B. Rathnayake | Yes |
| G 017. Keheliya Rambukwella | Yes |
| G 020. Vasudeva Nanayakkara | Yes |
| G 023. Mahindananda Aluthgamage | Yes |
| G 024. Ramesh Pathirana | Yes |
| G 026. Rohitha Abeygunawardhana | Yes |
| G 027. Namal Rajapaksa | Yes |
| G 028. M.U.M. Ali Sabry | Yes |
| G 029. Sarath Weerasekera | Yes |
| G 032. Duminda Dissanayake | Yes |
| G 033. Dayasiri Jayasekara | Yes |
| G 034. Lasantha Alagiyawanna | Yes |
| G 035. Sudarshini Fernandopulle | Yes |
| G 039. Mohan Priyadarshana De Silva | Yes |
| G 044. Janaka Wakkumbura | Yes |
| G 049. Tharaka Balasuriya | Yes |

| | |
|---|---|
| G 050. Kanchana Wijesekera | Yes |
| G 051. Indika Anuruddha Herath | Yes |
| G 052. Siripala Gamalath | Yes |
| G 055. Thenuka Vidanagamage | Yes |
| G 056. D. V. Chanaka | Yes |
| G 057. Sisira Jayakody | Yes |
| G 059. Prasanna Ranaweera | Yes |
| G 060. D. B. Herath | Yes |
| G 061. Nalaka Godahewa | Yes |
| G 062. Channa Jayasumana | Yes |
| G 066. John Seneviratne | Yes |
| G 070. Tissa Vitharana | Yes |
| G 071. Dilan Perera | Yes |
| G 078. Rohana Dissanayaka | Yes |
| G 079. Premalal Jayasekara | Yes |
| G 083. K. Kader Masthan | Yes |
| G 084. Ashoka Priyantha | Yes |
| G 085. Jayantha Ketagoda | Yes |
| G 089. Amarakeerthi Athukorala | Yes |
| G 092. Thisakutti Arachchi | Yes |
| G 093. U. K. Sumith Udukumbura | Yes |
| G 094. Pradeep Undugoda | Yes |
| G 095. Sanjeeva Edirimanna | Yes |
| G 096. Akila Ellawala | Yes |
| G 098. Udayana Kirindigoda | Yes |
| G 104. Upul Galappaththi | Yes |
| G 105. Udayakantha Gunathilaka | Yes |
| G 106. Kokila Gunawardene | Yes |
| G 107. Sivanesathurai Santhirakanthan | Yes |
| G 108. Milan Jayathilake | Yes |
| G 109. Kulasingam Dhileeban | Yes |
| G 110. Premitha Bandara Tennakoon | Yes |
| G 112. Chamara Sampath Dasanayake | Yes |
| G 113. Sudarshana Denipitiya | Yes |
| G 114. Isuru Dodangoda | Yes |
| G 115. H. Nandasena | Yes |
| G 116. Sagara Kariyawasam | Yes |
| O 001. Rishad Bathiudeen | No |

| | |
|---|---|
| O 003. Imthiaz Bakeer Markar | No |
| O 004. Tissa Attanayake | No |
| O 005. Rauff Hakeem | No |
| O 007. Lakshman Kiriella | No |
| O 015. Selvam Adaikkalanathan | No |
| O 016. Anura Dissanayaka | No |
| O 017. G. G. Ponnambalam | No |
| O 018. Ali Sabri Raheem | Yes |
| O 023. Abdul Haleem | No |
| O 026. Harsha De Silva | No |
| O 029. Dilip Wedaarachchi | No |
| O 031. Eran Wickramaratne | No |
| O 033. Govindan Karunakaram | No |
| O 034. Dharmalingam Sithadthan | No |
| O 035. Vijitha Herath | No |
| O 036. Harini Amarasuriya | No |
| O 037. Selvarajah Kajendren | No |
| O 039. Sivagnanam Shritharan | No |
| O 040. M. A. Sumanthiran | No |
| O 044. Buddhika Pathirana | No |
| O 046. Nalin Bandara Jayamaha | No |
| O 049. Velu Kumar | No |
| O 052. K. Sujith Sanjaya Perera | No |
| O 054. Imran Maharoof | No |
| O 055. Mujibur Rahuman | No |
| O 058. Charles Nirmalanathan | No |
| O 060. Thavaraja Kalai Arasan | No |
| O 062. Chaminda Wijesiri | No |
| O 063. Hesha Withanage | No |
| O 064. Waruna Liyanage | No |
| O 065. M. Udayakumar | No |
| O 066. W. H. M. Dharmasena | No |
| O 068. Rohana Bandara | No |
| O 082. Gayashan Nawananda | Yes |
| O 084. Anupa Pasqual | Yes |
| O 086. Muditha Prishanthi | Yes |
| O 087. Uddika Premarathne | Yes |
| O 089. Sudath Manjula | Yes |

| | |
|---|---|
| O 090. Mayadunna Chinthaka Amal | Yes |
| O 091. Wasantha Yapabandara | Yes |
| O 093. B. Y. G. Rathnasekara | Yes |
| O 094. Kumarasiri Rathnayaka | Yes |
| O 095. Ajith Rajapakse | Yes |
| O 096. Gunathilaka Rajapaksha | Yes |
| O 097. Thilak Rajapakshe | Yes |
| O 098. Upul Mahendra Rajapaksha | Yes |
| O 103. Madhura Withanage | Yes |
| O 104. D. Weerasingha | Yes |
| O 106. Samanpriya Herath | Yes |
| O 108. Yadamini Gunawardena | Yes |
| O 109. Manjula Dissanayake | Yes |
| O 110. Ranjith Bandara | Yes |
| O 113. Charitha Herath | Yes |
| O 114. Marjan Faleel | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் பதிற் செயலாளர் நாயகம் பின்வரும் பெயர்களைக் கேட்பதன் மூலம் பின்வரும் ஐந்து (05) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| S.B. Dissanayake | Yes |
| A.P. Jagath Pushpakumara | Yes |
| K.P.S. Kumarasiri | Yes |
| (Dr.) V. Radhakrishnan | No |
| Mano Ganesan | No |

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் மற்றும் 2 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

3 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 17 முதல் 19 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

" 9 (அ) (1) தடுத்துவைக்கப்பட்ட இடத்திற்குப் பொறுப்பான அலுவலர், எவ்வாள், தொடர்பில் 9 ஆம் பிரிவின் கீழான கட்டளை தொடர்புபடுகின்றதோ" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வர்த்தக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"அந்நீதவானுக்கு உடனடியாக அத்துடன் எவ்விடயத்திலும் அக்கட்டளையை வழங்குகின்ற நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் கிடைக்கக்" .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 28 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''படுமிடத்து, நீதவான்,—

(அ) மருத்துவப் பரிசோதனைக்காகச் சட்ட மருத்துவ அலுவலரின் முன்னர் சந்தேகநபர் நிறுத்தப்பட வேண்டுமென்றும், அத்தகைய சட்ட மருத்துவ அலுவலரினால் நீதவானுக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும் பணிக்கலாம்; அத்துடன்

(ஆ) சந்தேக நபர் தடுத்துவைக்கப்பட்ட இடத்தை மாற்றுவதற்கு கட்டளையொன்றை ஆக்கலாம்.'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் 28 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''பணித்தல் வேண்டும். " .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம்

4 ஆம் பக்கத்தில் 5 ஆம் மற்றும் 6 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

''மென்பதுடன் அரசியலமைப்பின் 126 ஆம், 140 ஆம் அல்லது 141 ஆம் உறுப்புரையின் கீழான வழக்கு நடவடிக்கை" .

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 26 முதல் 29 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘வெளிக்காட்டுமிடத்து, நீதவான்,—

(அ) அத்தகைய ஆளுக்கு அவசியமான மருத்துவச் சிகிச்சையை வழங்குவதற்கெனத் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கும் நேரத்தில் அத்தகைய ஆள் தொடர்பிலான ஒரு தடுத்துவைத்தற் கட்டளையும் வலுவிலிருக்குமிடத்து, அத்தகைய ஆள் தடுத்துவைக்கப்பட்ட இடத்தை மாற்றுவதற்கான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 3 ஆம் வரியை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘யதிபதியை நீதிவான் பணித்தலும் வேண்டும். ”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் பக்கத்தில் 12 ஆம் மற்றும் 13 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘மென்பதுடன் அரசியலமைப்பின் 126 ஆம், 140 ஆம் அல்லது 141 ஆம் உறுப்புரையின் கீழான வழக்கு நடவடிக்கைகளில்” .

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 முதல் 9 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

10 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 19 முதல் 24 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘ஆயின், எவ்வாறாயினும், 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மேல் நீதிமன்றமானது அம்மேல் நீதிமன்றம் தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, விதிவிலக்கான சூழ்நிலைகளில் சந்தேகநபரை பிணையில் விடுவிக்கலாம்; ”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 28 ஆம் மற்றும் 29 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“அரசியலமைப்பின் 126 ஆம், 140 ஆம் அல்லது 141 ஆம் உறுப்புரையின் கீழான” ;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

9 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை உட்புகுத்துமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

“பின்பற்றி. ”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் மற்றும் 14 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. ஒத்திவைப்பு:** இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 5.10 மணிக்கு பிரதிச் சபாநாயகரால் 2022 மார்ச் 23 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.